முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1409

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.08.2023**, செவ்வாய்கிழமை

(சோபகிருது வருடம் ஆடி மாதம் 23 ம் நாள்)

1. மாதர்ம ராஜனே அரங்கா
மரணமில்லா பெருவாழ்வு தருகின்ற தேசிகா
ஆதரவாய் உன்வழி மக்கள் சரணடைய
அழியாமை தந்து மீட்கும் குருராஜா
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞானஅறிவுரை ஆசி
வரமென அரங்கன் உன் நாமஜெபம்
வையகத்தில் எங்கு முழங்கப்படுகின்றதோ
3. அங்கெல்லாம் ஆறுமுகன் யான் இறங்கி
ஆக்கமும் சர்வ பாதுகாப்பும் தந்து அருள்புரிவேன்
அருளாக அறமாக அனைத்துமாக
அரங்கன் பேர் சொல்லும் அனைவருக்கும்
4. வரம்தந்து ஆறுமுகன் யான் துணையாய் நிற்க
வருங்காலம் வடிவேலன் என் ஆசியோடு
ஆசிபட உலகோர்க்கு ஞானசித்தி
அளவிலாப்பெருகி கலியுகமெல்லாம்
5. வாசிவென்ற யோகவான்கள் ஞானவான்களாக
வையகமெல்லாம் அரங்கன் உன்னால் நிரம்பி
நிரம்பியே இந்த பேருலகம்
நீதிமான்கள் வாழும் ஞானசித்தர் காலமாக
6. வரம்பில்லா தர்மநெறி காக்கின்ற
வல்லமைமிக்க ஞான ஆட்சிக்காலமாக
ஆகவே மாற்றம் நிகழும்
அரங்கனால் இந்த அற்புதம் பேருலகம் காணும்

7. வரமென அரங்கன் வழி
வையகமே வந்து நின்றால் பொதும்
வளர்ச்சி வல்லமைகூடிய பேரிடர் அழிவு இல்லாத
பாதுகாப்பு மிக்க புண்ணிய பூமியாக இந்த உலகம் மாற்றம் பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–